# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

**අංක 14,527 — 1965 ඔක්තෝබර් 6 වැනි බදාදා — 1965.10.6**

14,527 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 6 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## மகா தேசாதிபதியின் பிரகடனங்கள்

ம. தே. கா. இல. என். 108/65

**இலங்கைத் தீவினதும் அதனைச் சார்ந்த நாடுகளினதும் மகாதேசாதிபதியும் முதற்பெரும் படைத் தலைவரும், பிரித்தானிய ஏகாதிபத்திய அதி உத்தமவரிசை உறுப்பினரும் ஆகிய அதி உத்தமராம் விலியம் கொபல்லவ அவர்களிடமிருந்து**

(முத்திரை)

டபிள்யூ. கொபல்லவ.

சேர் ஆதர் கொட்வின் ரணசிங்கா, சீ.எம்.ஜீ., சீ.பி.ஈ.
திரு. மதுசுதன் லக்ஸ்மன் கொக்றே
திரு. நியூரன் எதிரசிங்கா

அவர்களுக்கு

வாழ்த்துக்கள் :

இதன் கண்ணே பின்னர் குறிப்பிடப்படுகின்ற நோக்கங்களுக்கென ஆணைக்குழு ஒன்றனை நியமித்தல் அவசியமானதென எனக்குத் தோன்றுகின்றபடியால் :

மகாதேசாதிபதி விலியம் கொபல்லவ ஆகிய நான் உங்களின் விவேகம், திறமை, நேர்மை, என்பவற்றில் நம்பிக்கையும் உறுதியும் கொண்டு (393 அத்தியாயமான) விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் 2 ம் பிரிவினைப் பின்பற்றி குறிப்பிடப்பட்ட,

சேர் ஆதர் கொட்வின் ரணசிங்கா

திரு. மதுசுதன் லக்ஸ்மன் கொக்றே

திரு. நியூரன் எதிரசிங்கா

ஆகிய உங்களை

(1) 1961 ம் ஆண்டு ஜூலை முதலாம் தேதி தொடங்கி இந்த எழுத்தாணையின் தேதியின் முடிவடையும் காலத்துள் (இதன் கண் இதன் மேல் வங்கி எனக் குறிப்பிடப்படும்) 1961 ம் ஆண்டின் 29 ம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட மக்கள் வங்கியின் செயல் முறையும் நிருவாகமும் பற்றி பின்வரும் விஷயங்களில் ; அவையாவன :

(அ) வங்கி என்ன நோக்கங்களுக்காக நிறுவப்பட்டதோ அந்நோக்கங்களை மேற் சொல்லப்பட்ட காலத்துள் எவ்வளவுக்கு நிறைவேற்றியுள்ளது, அல்லது நிறை வேற்றத்தவறிவிட்டது,

(ஆ) மேற் சொல்லப்பட்ட காலத்துள் ஆள் எவருக்காவது அல்லது நிறுவனம் எதற்காவது போதிய பிணையின்றி அல்லது போதிய பாதுகாப்பின்றி அல்லது வங்கியின் அக்கறைகளுக்கு முரணானவகையில் ஏதேனும் கடனை, மேலதிக பற்றினை அல்லது வேறு உதவிகளை கொடுத்துள்ளதா,

(இ) மேற் சொல்லப்பட்ட காலத்துள் வங்கியின் பணிப்பாளர் குழுவின் உறுப்பினர் எவரும் அல்லது அதன் உத்தியோகத்தர், ஊழியர் எவரும் வங்கியின் அக்கறைகளுக்கு பாதகமான எவ்வகையிலேனும் நேராக அல்லது மறைமுகமாக நடந்துள்ளாரா என்பன பற்றிக் குறிப்பாக விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறும்,

(2) விசாரணையின் பயனாக நீங்கள் தேவையானவை எனக் கருதும் ஆலோசனைகளைக் குறிப்பாக அவ்வங்கி எந்நோக்கங்களுக்கென நிறுவப்பட்டதோ அந்நோக்கங்களை வங்கி நிறைவேற்றுதல் இயல்வதாகுவதற்கென வங்கியின் திறமையானதும் இலேசானதுமான செயல்முறையைப் பெறுவதற்குக் கையாளப்பட வேண்டிய வழி வகைகள் பற்றியும் உங்களால் முறைப்பாடுகள் பெறப்படும் மேற் கூறப்பட்ட விஷயங்களுடன் தொடர்பான அல்லது அவை விளைவான வேறு ஏதேனும் விஷயத்தினைப்பற்றி எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் அத்தகைய ஆலோசனையளிக்குமாறும் இவற்றால் எனது ஆணைபெற்றோராக உங்களை நியமிக்கிறேன்.

குறிப்பிடப்பட்ட சேர் ஆதர் கொட்வின் ரணசிங்க ஆகிய உங்களை இந்த ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கிறேன்.

குறிக்கப்பட்ட ஆணைபெற்றோராகிய உங்களுக்குத் தேவையானவையெனத் தோன்றும் அத்தகைய எல்லா விசாரணைகளைச் செய்யுமாறும் ஆய்வுகளை நடாத்துமாறும் இத்தால் உங்களுக்கு அதிகாரமும் தத்துவமும் அளிப்பதோடு உங்களின் கைப்பட உங்களின் விசாரணைகளின் பலன்களையும் ஆலோசனைகளையும் எடுத்துக்காட்டும் ஓர் அறிக்கையை கூடியளவு சுணக்கமின்றி எனக்கு அனுப்பிவைக்குமாறும் இத்தாற் பணிக்கிறேன்.

மேற் குறிக்கப்பட்ட விஷயங்கள் சம்பந்தமாக ஏதேனும் விசாரணையில் உங்களுடைய தற்றுணிபின்படி தீர்மானிக்கப்படும் அத்தகைய பகுதி பகிரங்கமாக நடாத்தப்படுதலாகாதென இத்தால் பணிக்கிறேன்.

உங்களுடைய விசாரணைகளினதும் ஆய்வுகளினதும் நோக்கங்களுக்காக உதவி அல்லது விபரம் கோரப்படும் எல்லா உத்தியோகத்தர்களையும் வேறு ஆட்களையும் அதன் சார்பின் முறைப்படி புரியப்படக்கூடிய அத்தகைய எல்லா உதவிகளையும் புரியுமாறும் அளிக்கப்படக்கூடிய அத்தகைய எல்லா விபரங்களையும் அளிக்குமாறும் இத்தால் கட்டளையிட்டுப் பணிக்கிறேன்.

கொழும்பில், இத்தீவின் இலச்சினையின் கீழ் ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தைந்தாம் ஆண்டு ஒற்றோபர் மாதம் ஐந்தாம் நாளாகிய இன்று அளிக்கப்பட்டது.

அதி உத்தமரின் கட்டளைப்படி,

நி. விஜேவர்தன,
மகாதேசாதிபதியின் செயலாளர்.

10-487


இலங்கை வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில் இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.